**இலங்கை வயம்ப பல்கலைக்கழகம் -2018**

---

## 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இலங்கை வயம்ப பல்கலைக்கழகத்தின் 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, உரித்திலான மாற்றங்கள் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2018 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கமைய இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டது. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்க வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

எனது அறிக்கையில் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்டுள்ள விடயங்களினால் ஏற்படும் தாக்கங்களை தவிர்த்து பல்கலைக்கழகத்தின் 2018 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளபடியான நிதி நிலைமை மற்றும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிச் செயலாற்றல் மற்றும் காசுப்பாய்ச்சல் என்பன இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையானதும் நியாயமானதுமான நிலைமைகளை புலப்படுத்துகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

## 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அவ் நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் இந்த அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

## 1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக முகாமைத்துவத்தின் மற்றும் ஆளுகைக்குட்பட்ட தரப்பினரின் பொறுப்பு

---

இந்த நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, பல்கலைக்கழகம் தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை மதிப்பீடு செய்தல், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவுடன் தொடர்புடைய விடயங்களை பொருத்தமானவாறு வெளிப்படுத்துதல் மற்றும் முகாமைத்துவமானது பல்கலைக்கழகத்தினை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

பல்கலைக்கழகத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் பல்கலைக்கழகத்தின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

## 1.4 கணக்காய்வு விடயப்பரப்பு (நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பில் கணக்காய்வாளர் பொறுப்பு)

---

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடிகள் அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்திற் கொள்ளப்படல் வேண்டும்.

என்னால் துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நிமங்களின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டன.

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு பல்கலைக்கழகத்தின் உள்ளக கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமானதன்மை தொடர்பாக அபிப்பராயமொன்றை தெரிவிப்பதற்கு கருத்து தெரிவிக்கவில்லை.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும்

முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களின் பொருத்தமான தன்மையை மதிப்பீடு செய்தல்.

- பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு முகாமைத்துவத்தின் தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு பயன்பாட்டின் பொருத்தப்பாடுகள் தொடர்பிலும், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவிற்கு அமைய தொடர்ந்து செயற்படுவதற்கு பல்கலைக்கழகத்திற்கு உள்ள ஆற்றல் தொடர்பில் குறிப்பிடத்தக்க ஐயப்பாட்டிற்கு காரணமாகவுள்ள நிகழ்வுகள் அல்லது நிலைமைகளுடன் தொடர்புடைய பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றதா என முடிவிற்குவருதல். பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், அல்லது எனது அபிப்பிராயத்தினை மாற்றியமைப்பதற்கு அவ்வாறான வெளிப்படுத்தல்கள் போதியனவாக காணப்படாதிருக்கையில், நிதிக்கூற்றுக்களிலுள்ள வெளிப்படுத்தல்களுடன் தொடர்புபட்டுள்ள எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டும். எனது கணக்காய்வு அறிக்கைத் திகதி வரையிலும் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகள் எனது முடிவுகளிற்கு அடிப்படையாகக் காணப்படுகின்றன. எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் நிறுவகத்தின் தொடர்ந்தியங்கும் நிலையினை இடைநிறுத்துவதற்கு காரணங்களாக அமையலாம்.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையாக கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்களை பொருத்தமான அற்றும் நியாயமான முறையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளமையை மதிப்பாய்வு செய்தல்.

முடியுமான அளவு மற்றும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்கு கணக்காய்வு விடயப் பரப்பும் விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்களை சமர்ப்பித்தல் தொடர்பில் பார்க்கப்படும் நிதியத்தின் பணிகளை தொடர்ச்சியான மதிப்பாய்வு செய்வதற்கு இயலக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, கட்டமைப்பு, நடைமுறைகள், புத்தகங்கள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் கட்டமைப்பு நடைமுறைகள், புத்தகங்கள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான முறையில் பேணப்படுகின்றதாக;

- ஏதேனும் பொருத்தமான எழுத்துமூல சட்டமொன்றிற்கு அல்லது நிதியத்தின் கட்டுப்பாட்டு சபையினால் வெளியிடப்பட்ட பொது அல்லது விசேட ஏற்பாடொன்றிற்கு இணங்க நிதியம் செயற்பட்டுள்ளதாக,

- தமது அதிகாரங்கள், கடமைகள் மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக.

- வளங்கள் சிக்கனமாகவும், வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமான கால எல்லையினுள் மற்றும் உரிய சட்டங்கள் மற்றும் விதிகளுக்கு இணங்க கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டுள்ளதாக,

## 1.5 நிதிக்கூற்றுக்கள்

--------------------------------

### 1.5.1 நிதிக்கூற்றுக்களை தயாரித்தல் தொடர்பிலான உள்ளக கட்டுப்பாடு

-----------------------------------------------------------------------------------------------------------

கொடுக்கல் வாங்கல்களின் முகாமைத்துவத்தின் பொதுவான மற்றும் திட்டவட்டமான அதிகாரத்துடன் நடைமுறைப்படுத்தல், உரிய நிதியிடல் நியமங்களுக்கிணங்க நிதிக்கூற்றுக்களை தயாரிப்பதற்கு தேவையான வகையில் கொடுக்கல் வாங்கல்களை பதிவு செய்தல் மற்றும் சொத்துக்களுக்கான கணக்கறிக்கையை பேணுதல், முகாமைத்துவத்தின் பொதுவான மற்றும் குறிப்பான அதிகாரத்துடன் மாத்திரம் சொத்துக்களுக்கு பிரவேசித்தல், பதிவு செய்யப்பட்ட சொத்துக்களுக்கான கணகளித்தகைமை பேணப்பட்டு சொத்துக்களுடன் நியாயமான காலப்பகுதியினுள் ஒப்பிடல் மற்றும் வேறுபாடுகள் காணப்படுமாயின் அவை தொடர்பில் உரிய நடவடிக்கை எடுத்தல் ஆகியவற்றுக்காக நியாயமான உறுதிப்பாடொன்றை பெற்றுக்கொள்ள போதியளவான ‘‘சிறப்பான முறையில் திட்டமிடப்பட்ட’’ உள்ளக கணக்கீட்டு கட்டுப்பாட்டு கட்டமைப்பொன்றினை நிறுவனத்தினால் நடாத்திச் செல்லப்படல் அவசியமானதாகும். பொதுப் பேரேடு, குறிப்பேடு, குறிப்பேட்டு உறுதிச்சீட்டுக்கள், கொடுப்பனவு உறுதிச்சீட்டுக்கள் போன்ற பிரதான கணக்கீட்டு அறிக்கைகளை பேணிச் செல்லல் தொடர்பிலான கணக்காய்வு அவதானிப்புக்கள் பின்வரும் தலைப்புக்களின் கீழ் உள்ளடக்கப்பட்டுள்ளது.

### 1.5.2 இலங்கை பொதுத் துறை கணக்கீட்டு நியமங்களுடன் இணங்காமை

-----------------------------------------------------------------------------------------------------------

| | குறித்த நியமத்துடனான தொடர்புடன் இணங்காமைகள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | நியம இலக்கம் 01 இன் 24 ஆம் பந்தியின் பிரகாரம் பாதிடப்பட்ட எண்ணிக்கை மற்றும் கணக்கு எண்ணிக்கை ஆகியவற்றுக்கிடையேயான ஒப்பீட்டு அறிக்கையின் பிரகாரம் பாதிடப்பட்ட பெறுமதிகள் உண்மையான பெறுமதிகளை விஞ்சுகின்றமை தொடர்பில் நிதிக்கூற்றுக்களின் அடிக் குறிப்பொன்றினூடாக வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை. | எதிர்காலத்தில் திருத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | இலங்கை பொதுத் துறை கணக்கீட்டு நியமங்களுக்கமைய நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஆ) | நியம இலக்கம் 07 இன் 50 ஆம் பந்தியின் பிரகாரம் ஒன்றுக்கொன்று வேறுபட்ட சொத்து தொகுதிகள் வெவ்வேறாக காண்பிக்கப்பட வேண்டிய போதிலும், நிறுவனத்தின் காணிகள் மற்றும் வீதிகள் ஒரே தன்மையிலான மற்றும் ஒரே தொகுதியின் கீழான சொத்துக்களாக காண்பிக்கப்பட்டிருந்தது. | அது தொடர்பில் தேடிப் பார்த்து திருத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | இலங்கை பொதுத் துறை கணக்கீட்டு நியமங்களுக்கமைய நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

### 1.5.3 கணக்கீட்டு கொள்கைகள்

-----------------------------------------

| | கணக்காய்வு அவதானிப்புகள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | அரச மானியங்களை பயன்படுத்தி கைப்பற்றப்பட்டிருந்த காணிகள் மற்றும் வீதிகளின் பெறுமதி காலக்கழிவு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | அது தொடர்பில் தேடிப் பார்த்து திருத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும | காலக்கழிவு செய்ய நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஆ) | புலமைப்பரிசில் மற்றும் மஹாபொல ஆகியவற்றுக்காக காசு பெறுவனவு மற்றும் கொடுப்பனவு காசு அடிப்படையில் கணக்கு வைக்கப்படுதல் கொள்கையொன்றாக பின்பற்றப்படுவதாக குறிப்பிடப்பட்டிருந்த போதிலும், மீளாய்வாண்டின் போது அட்டுறு அடிப்படையில் கணக்கு வைக்கப்பட்டிருந்தது. | மஹாபொல, மாணவர் உதவுதொகை பணத்தை அடிப்படையாகக் கொண்டு கணக்கு வைப்பதுடன், கொடுப்பனவு மேற்கொள்ளும் போது முதன்முதலில் | பின்பற்றப்படும் கணக்கீட்டு கொள்கையை கணக்குகளின் மூலம் வெளிப்படுத்துவற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

பல்கலைக்கழத்தினால் கொடுப்பனவு மேற்கொண்டு, அது பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் மீளளிப்பு செய்யப்படும். பெற வேண்டிய மஹாப்பொல, மாணவர் உதவு தொகையாக கணக்கு வைக்கப்பட்டுள்ளது. மீளளிப்பு செய்வதற்குள்ள அந்த பணமாகும்.

## 1.5.4 கணக்கீட்டு குறைபாடுகள்

-----------------------------------------

| | கணக்காய்வு அவதானிப்புகள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டிற்குரிய ரூபா 2,599,343 தொகையான வழங்கல் கடன் கொடுத்தோர் மற்றும் சொத்துப் பெறுமதிகள் கணக்குகளிலிருந்து கைவிடப்பட்டிருந்தது. | கணக்காய்வு ஐய வினாவில் கொள்வனவுக்குரிய கொடுப்பனவுகளை பரிசோதனை செய்யும் போது உரிய உறுதிச்சீட்டுக்கள் 2018 ஆம் ஆண்டில் வெளியிடப்பட்டதாக உறுதிப்படுத்துகின்றது. எனினும், உரிய பிரிவுத் தலைவர்களால் 2019 ஆம் ஆண்டின் இருப்புக்கள், சேவை உடன்படிக்கைகள் கையொப்பமிடப்பட்டுள்ளமையால் 2019 ஆம் ஆண்டின் நிலையான சொத்துக்கள் பதிவேட்டிற்கு உட்படுத்தப்பட்டுள்ளதாக கருதி 2019 ஆம் ஆண்டிற்கான சொத்துக்களாக கணக்கு வைக்கப்பட்டுள்ளது. | சரியான கணக்கு வைக்கப்பட வேண்டும். |
| (ஆ) | வெளிநாடு சென்று உரிய காலப்பகுதியினுள் நாடு திரும்பாது உடன்படிக்கையை மீறிய மூன்று | வெளிநாடு சென்று உரிய காலப்பகுதியினுள் நாடு திரும்பாது உடன்படிக்கையை மீறிய மூன்று பேராசிரியர்களுக்கு செலுத்த | அடிப்படை கணக்கீட்டு நியமங்களுக்கமைய நடவடிக்கை எடுக்கப்பட வேண்டியமை. |

| | | | |
|---|---|---|---|
| | பேராசிரியர்களுக்கு செலுத்த வேண்டிய ரூபா 792,308 தொகையான பணிக்கொடை ஒதுக்கீடுகள் கணக்குகளிலிருந்து கைவிடப்பட்டிருந்தது. | வேண்டிய பணிக்கொடை ஒதுக்கீடுகள் கணக்குகளிலிருந்து கைவிடப்பட்டிருந்ததுடன், அதனை திருத்துவதற்கு எதிர்காலத்தில் நடவடிக்கை எடுக்கப்படும் | |
| (இ) | கடந்த வருடத்தின் போது ரூபா 1,279,086 தொகையான கூடுதலாக செலுத்தப்பட்ட சம்பளங்கள் பெற வேண்டிய தொகையொன்றாக கணக்கு வைக்கப்பட்டிருக்கவில்லை. | திருமதி.ஏ.என்.கே பெரோரா அவர்களிடமிருந்து அறவிடப்பட வேண்டிய பணத்தை உடனடியாக அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டவாறு உள்ளதுடன், ஆர்.பீ.ஐ.ஆர்.சேனரத்ன அவரிடமிருந்து அறவிடப்பட வேண்டிய பணத்தை பல்கலைக்கழக நலன்புரி நிதியத்திலிருந்து விடுவிக்கும் போது அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டவாறு உள்ளது. | அடிப்படை கணக்கீட்டு தத்துவங்களுக்கமைய கணக்கு வைப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஈ) | தற்போது பணிகள் நிறைவு செய்யப்பட்டிராத ஒப்பந்தமொன்றிற்காக 2018 ஆம் ஆண்டின் போது பெறப்பட்டிருந்த ரூபா 1,330,500 பெறுமதியான திசை காட்டும் மின்சார வெளிச்ச தூண்கள் 40 இறுதி இருப்பாக காண்பிக்கப்பட்டமையால் பராமரிப்பு இருப்பு பெறுமதி ரூபா 1,330,500 இனால் அதிகரித்துக் காண்பிக்கப்பட்டிருந்தது. | ஒப்பந்த பணிகளின் கீழ் கிடைத்திருந்த 40 வீதி ஒளிர்வுத் தூண்களை பல்கலைக்கழகத்தில் நடுவதற்காக களஞ்சியத்தில் வைக்கப்பட்டிருந்தது. இதன் காரணமாக இருப்பு கூடுதலாக கணிப்பிடப்பட்டிருந்தது. ஒப்பந்தக்காரரிடமிருந்து மேலும் பெற வேண்டிய விளக்குகள் மற்றும் சிங்க உருவம் பெற்றுக்கொள்ளப்பட்டு இந்த விளக்கு கம்பங்களுக்குரிய இடங்களில் நட்டு, இந்த ஒப்பந்த பணியை முழுமையாக நிறைவு செய்து உரிய முற்பணத் தொகையை தீர்ப்பனவு செய்ததன் பின்னர் இந்த விளக்குத் கம்பங்களை இருப்பிலிருந்து அகற்ற முடியும். | சரியான கணக்கு வைப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (உ) | மீளாய்வாண்டின் இறுதியில் ஒப்பந்ததாரர்களிடமிருந்து அறவிடப்பட வேண்டிய மின்சார கட்டணங்கள் ரூபா 4,078,948 தொகையானது | ஒப்பந்தக்காரரிடமிருந்து அறவிடப்பட வேண்டிய மின்சார செலவினங்களை அறவிடுவதற்காக அறிவுறுத்தல் கடிதங்கள் ஒப்பந்தக்காரர்களுக்கு அனுப்பப்பட்டுள்ளது. மின்சார | நிறுவனத்திற்கு அறவிடப்பட வேண்டியதாக இனங்காணப்பட்டுள்ள அனைத்து |

| | | | |
|---|---|---|---|
| | பெற வேண்டிய வருமானமாக எடுக்கப்பட்டிருக்கவில்லை. | செலவினத்தை தீர்த்ததன் பின்னர் அந்த பற்றுச்சீட்டுக்கள் ஒப்பந்தக்காரர்களால் மூலதன பிரிவிற்கு முன்வைக்கப்பட்டதுடன், தீர்க்கப்படாத மின்சார செலவினம் காணப்படுமாயின் அறவிடப்படும். ஒப்பந்தக்காரரிடமிருந்து அறவிடப்பட வேண்டிய மின்சார செலவினத்தை தீர்ப்பனவு செய்தல் பல்கலைக்கழகத்தின் பிரதம செயற்பாட்டு நடைமுறைக்கு நேரடியாக தாக்கம் செலுத்தாது என்பதால், அந்த பெறுமதி பெற வேண்டிய வருமானமாக கணக்கு வைக்கப்படாது. | வருமானங்களையும் கணக்கு வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஊ) | மருத்துவ பீடத்தின் மாணவர் விடுதிகளில் நிர்மாணங்கள் தொடர்பிலான ரூபா 5,845,478 தொகையான மேலதிக வேலைப் பெறுமதியொன்று கணக்குகளிலிருந்து கைவிடப்பட்டிருந்தது. | மருத்துவ பீடத்தின் மாணவர் விடுதியினை 02 பிரிவுகளாக பிரிக்கும் கிரயமாக செலுத்த வேண்டிய இந்த பணத்தை பல்கலைக்கழக மானியங்களிலிருந்து செலுத்துவதற்காக அமைச்சின் அங்கீகாரத்தினை பெற்றுக்கொண்டதன் பின்னர் எதிர்காலத்தில் செலுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். உரிய அங்கீகாரங்களின்றி இந்த பெறுமதியை கணக்கு வைக்க முடியாது. | விடுதி தற்போது பயன்பாட்டிற்கு எடுக்கப்படுகின்றமையால் கணக்கு வைப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (எ) | உயர் கல்வி அமைச்சின் நிதியேற்பாடுகளின் மூலம் நிர்மாணிக்கப்பட்டிருந்த பல்கலைக்கழகத்திற்கு ஒப்படைக்கப்பட்டுள்ள இரண்டு விடுதிகளின் கூட்டுப் பெறுமதி ரூபா 733,741,515 தொகை கணக்கு வைக்கப்பட்டிராமையால் அந்த பெறுமதியால் கட்டிடங்கள் கணக்கு குறைவாக காண்பிக்கப்பட்டிருந்தது. | மருத்துவ பீடத்திற்காக ரூபா 212,678,700 பெறுமதியானது உயர் கல்வி அமைச்சினூடாக வழங்கப்பட்டிருந்ததுடன், அதன் மேலதிகப் பணிப் பெறுமதியான ரூபா 5,845,478 தொகையான கிரயத்தினை செலுத்தும் பணிகளை தீர்வு செய்ததன் பின்னர் விடுதிக்கான மொத்தப் பெறுமதியை கணக்கு வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.<br><br>சரியாக கணக்கு வைப்பதற்கு | சரியான கணக்கு வைக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | | நடவடிக்கை எடுக்க வேண்டும். உயர் கல்வி அமைச்சின் நிதியேற்பாட்டினூடாக குளியாப்பிட்டிய வளாகத்தில் நிர்மாணிக்கப்பட்ட ரூபா 425,357,400 பெறுமதியான 02 விடுதிகளின் பெறுமதிகள் இந்த வருடத்தினுள் கணக்கு வைக்கப்படும். | |
| (ஏ) | மீளாய்வாண்டின் போது பெறப்பட்டிருந்த வங்கி வட்டி வருமானத்திலிருந்து அறவிடப்பட்டிருந்த ரூபா 530,624 தொகையான நிறுத்தி வைக்கப்பட்டிருந்த வரியானது வங்கிக் கட்டணங்களாக கணக்கு வைக்கப்பட்டிருந்தது. | எதிர்காலத்தில் திருத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | சரியான கணக்கு வைக்கப்பட வேண்டும். |

## 1.5.5 கணக்காய்விற்கான எழுத்துமூல சான்றுகளின்மை

---

| | விடயம் | தொகை (ரூபா) | வழங்கப்படாத கணக்காய்வு சான்று | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|---|
| (அ) | காணி | 391,105,735 | (i) பெறுமதி கூட்டிணைக்கப்பட்டுள்ள காணியின் அளவில்<br>(ii) காணிகளுக்கான நிலையான சொத்துக்கள் பதிவேடு | சட்டரீதியாக சுவீகரிக்கப்பட்ட அனைத்து காணிகளினதும் உரிய ஒப்படைப்பு கட்டளைகள் கணக்காய்விற்கு வழங்கப்பட்டுள்ளது. இதுவரையிலும், பயன்படுத்தப்படுகின்ற எனினும் சட்டரீதியான உரித்தினை பெற்றிராத ஏனைய காணிகளை சுவீகரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டவாறு உள்ளது. | நிலவும் சட்டங்கள், விதிகளுக்கமைய நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஆ) | தளபாடப் பொருத்திகள் | 235,126,605 | | 2017 ஆம் ஆண்டிற்கான பொருள் மெய்மையாய்வு 2018- | உரிய அறிக்கைகளை உரிய திகதியில் |
| (இ) | அலுவலக | 154,267,123 | | | |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | உபகரணங்கள் | | பொருள் மெய்மையாய்வு அறிக்கைகள் | 01-15 ஆந் திகதிக்கு முன்னர் மேற்கொண்டு உரிய அறிக்கைகளை சமர்ப்பிக்குமாறு 2017.12.14 ஆந் திகதிய கடிதத்தின் மூலம் அனைத்து மதிப்பாய்வு குழுக்களுக்கும் அறிவித்துள்ளது. 2018 ஆம் ஆண்டின் மார்ச் மாதம் ஏற்பட்ட பல்கலைக்கழக கல்விசார் பதவியணியிகளின் வேலை நிறுத்தங்களின் காரணமாக அறிக்கைகளை வழங்குதல் தாமதமாகியது. நிறைவுறுத்தற் கடிதங்கள் அனுப்பப்பட்டதன் பின்னர் அனைத்து அறிக்கைகளும் 2018.11.14 ஆந் திகதி உதவிக் கணக்காய்வாளர் அதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. | உள்ளபடியாக கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஈ) | ஆய்வுகூட மற்றும் கற்பித்தல் உபகரணங்கள் | 184,273,729 | | | |
| (உ) | வாசிகசாலை புத்தகங்கள் மற்றும் சஞ்சிகைகள் | 15,985,532 | | | |
| (ஊ) | பட்டமளிப்பு மேலங்கி | 427,787 | | | |

## 1.6 பெற வேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

---

### 1.6.1 பெற வேண்டிய பணம்

---

| கணக்காய்வு அவதானிப்புகள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரைகள் |
|---|---|---|
| பல்கலைக்கழக பதவியணி கடன் ரூபா 159,820 தொகையான 03 மீதிகள் 06 முதல் 12 வருட காலமாக அறவிடப்படாது காணப்பட்டது. | ரீ.எம்.சீ.டீ குணசேகர - இடர்கடன் 114,240<br>- ஊழியர் கடன் 4,080<br>டபிள்யூ.டீ.ஈ பிரயதர்ஷன - ஊழியர் கடன் 41,500<br>------------<br>159,820<br>======<br>மேற்படி பேராசிரியர்கள் பல்கலைக்கழக சேவையிலிருந் நீங்கியுள்ளமையால் இந்த மீதிகள் அவர்களின் நலன்புரி நிதியத்தை விடுவிக்கும் போது குறைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | அறவிடப்பட வேண்டிய பணத்தை துரிதமாக தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

## 1.7 சட்டங்கள், விதிகள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணங்காமை

---

| | சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமைகள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரைகள் |
|---|---|---|---|---|
| (அ) | 1978 இன் 16 ஆம் இலக்க பல்கலைக்கழகங்கள் அதிகாரச்சட்டத்தின் 45 ஆம் பிரிவு மற்றும் 2005 யூலை 13 ஆந் திகதிய 30 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கை | பொதுதிறைசேரியின் மற்றும் பல்கலைக்கழகங்கள் மானியங்கள் ஆணைக்குழுவின் அங்கீகாரமின்றி மீளாய்வாண்டினுள் 06 சுய கல்விப் பாடநெறிகளின் ரூபா 34,500,000 ஆக மிகைப் பணம் நிலையான வைப்புக்களில் முதலீடு செய்யப்பட்டிருந்தது. | பல்கலைக்கழகங்கள் கட்டுப்பாட்டுச் சபையில் 2018.10.25 ஆந் திகதி இடம்பெற்ற 193 ஆம் சபைக் கூட்டத்தின் போது அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளதுடன், பொது திறைசேரியின் மற்றும் பல்கலைக்கழகங்கள் மானியங்கள் ஆணைக்குழுவின் மற்றும் உயர் கல்வி அமைச்சின் அங்கீகாரத்தை பெற்றுக்கொள்வதற்காக கடிதமொன்று 2018.12.20 ஆந் திகதி அனுப்பப்பட்டுள்ளது. | சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுக்கு இணங்க நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஆ) | 2016 மார்ச் 01 ஆந் திகதிய 04/2016 ஆம் இலக்க பல்கலைக்கழகங்கள் மானியங்கள் ஆணைக்குழுவின் சுற்றறிக்கை | வெளிவாரி பாடநெறிக் கட்டணங்களில் ஏனைய பணிகளுக்காக செலவினம் மேற்கொள்ள அங்கீகாரம் வழங்கப்பட்டிராத போதிலும், பல்கலைக்கழகத்தின் நலன்புரி நிதியத்திற்கு ரூபா 544,585 மற்றும் | கட்டுப்பாட்டுச் சபையின் அங்கீகாரத்தின் கீழ் பாடநெறி பாதீட்டில் ஒதுக்கப்பட்ட நேரக் கிரயத்தில் 1% ஊழியர் நலன்புரி நிதியத்திற்கு மாற்றப்படும். வெளிவாரி பாடநெறிக் கட்டணங்களில் ஏனைய பணிகளுக்காக செலவிடப்படுவது | சுற்றறிக்கைகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | | ஏனைய பணிகளுக்காக ரூபா 2,205,657 தொகை வெளிவாரி பாடநெறிக் கட்டணங்களிலிருந்து செலவிடப்பட்டிருந்தது. | செயற்திட்ட அபிவிருத்தி நிதியத்திலிருந்தாகும். | |
| (இ) | பல்கலைக்கழகத்தின் தாபனவிதிக் கோவை<br>-------------------------------------------------------- | | | |
| (i) | XX ஆம் அத்தியாயத்தின் 3.1 ஆம் பிரிவு | பல்கலைக்கழகத்தின் கல்விசார் பிரிவின் உத்தியோகத்தர்களுக்கான வருமானப் பதிவேடொன்று பேணப்பட்டிருக்கவில்லை. | பதில்கள் வழங்கப்பட்டிருக்கவில்லை. | சட்டங்கள் மற்றும் விதிகளுக்கமைய நடவடிக்கை எடுக்க வேண்டும் |
| (ii) | XXVI ஆம் அத்தியாயத்தின் 2.9 ஆம் உப பந்தி (பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் 04/2013 ஆம் நிறுவன சுற்றறிக்கையின் மூலம் திருத்தப்பட்ட) | பொருள் மெய்மையாய்வு பணிகள் திசெம்பர் மாதத்தின் இறுதிக்கு முன்னர் ஆரம்பிக்கப்பட்டு சனவரி மாதம் 15 ஆந் திகதிக்கு முன்னர் நிறைவடையும் வகையில் மேற்கொள்வதற்கு திட்டமிடப்பட்டிருக்கவில்லை. | பொருள் மெய்மையாய்வினை 2018-01-15 ஆந் திகதிக்கு முன்னர் மேற்கொண்டு உரிய அறிக்கைகளை சமர்ப்பிக்குமாறு 2017.12.14 ஆந் திகதிய கடிதத்தின் மூலம் அனைத்து மதிப்பீட்டுக் குழுக்களுக்கும் அறிவுறுத்தப்பட்டுள்ளது. 2018 ஆம் ஆண்டின் மார்ச் மாதம் ஏற்பட்ட பல்கலைக்கழகத்தின் கல்விசாரா பதவியணியின் வேலை நிறுத்தம் காரணமாக அறிக்கைகளை வழங்குவதில் தாமதம் ஏற்பட்டது. அறிக்கைகளும் 2018.11.14 ஆந் திகதி உதவிக் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. | சட்டங்கள் மற்றும் விதிகளுக்கமைய நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (iii) | XXVI ஆம் அத்தியாயத்தின் 3.1 ஆம் உபபந்தி (பல்கலைக்கழங்கள் மானியங்கள் ஆணைக்குழுவின் 04/2013 ஆம் தாபன சுற்றறிக்கையின் மூலம் திருத்தப்பட்ட) | 2018 ஆம் ஆண்டிற்கான மதிப்பாய்வு சபை அறிக்கைகள் 2019 பெப்ரவரி மாதம் முடிவடைவதற்கு முன்னர் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு முன்வைக்கப்பட்டிருக்கவி | 2018 ஆம் ஆண்டிற்கான வருடாந்த பொருள் மெய்மையாய்வு பணிகள் இன்றளவில் மேற்கொள்ளப்பட்டவாறு உள்ளது | சட்டங்கள் மற்றும் விதிகளுக்கமைய நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | | ல்லை. | | |
| (iv) | XXVI அத்தியாயத்தின் 4 ஆம் உப பந்தி | 2017 ஆம் ஆண்டில் பொருள் மெய்மையாய்வில் பயன்படுத்த முடியாத மற்றும் பொருத்தமற்ற முறையில் வெளியிடப்படும் பொருட்கள் திறந்த ஏலமொன்றில் அல்லது திறந்த அறிவித்தலினூடாக திறந்த கேள்வி அழைப்பின் மூலம் அகற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | பிரிவுகளினால் அனுப்பப்பட்ட பயன்படுத்த முடியாத பொருட்களை அகற்றுவதற்காக அனுப்பப்பட்ட சில அறிக்கைகளுக்குரிய பொருள் கொள்வனவு செய்த திகதிகள் மற்றும் பெறுமதி குறிப்பிடப்பட்டிருக்கவில்லை. அவ்வாறே அந்த அறிக்கை கிடைக்கும் சந்தர்ப்பத்தில் 2018 ஆம் ஆண்டிற்கான பொருள் மெய்மையாய்வு பணிகள் ஆரம்பிக்கப்பட்டிருந்தமையால், பயன்படுத்த முடியாத பொருட்களை அகற்றும் பணிகளை அதனுடன் மேற்கொள்ள உத்தேசிக்கப்பட்டுள்ளது. | சட்டங்கள், விதிகளுக்கமைய நாளதுவரையாக்கல் பணிகள் மேற்கொள்ளப்பட வேண்டும். |
| (ஈ) | 2017 நவம்பர் 28 ஆந் திகதி இடம்பெற்ற பொது முயற்சிகள் குழுவின் இலக்கம் 10 | சுய நிதியிடல் பாடநெறிகள் கணக்குகள் மற்றும் எஞ்சிய பணம் தொடர்பான அறிவுரைகள் வழங்கப்பட்டுள்ள போது அந்த தீர்மானங்கள் நடைமுறைப்படுத்தப்பட்டிருக்கவில்லை. | வெளிவாரி பாடநெறி பணிப்பாளர்களால் அறிவிக்கப்பட்ட திட்டவட்டமாக நிறைவு செய்யப்பட்ட பாடநெறிகளின் மிகைப் பணம் Programme Development Fund இன் கீழ் மாற்றுதல் பொருத்தமானதென 63 ஆம் கணக்காய்வு குழுவில் தீர்மானிக்கப்பட்டது. | பகிரங்க முயற்சிகள் தொடர்பான குழுவின் தீர்மானத்தின் பிரகாரம் செயற்பட வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

---------------------

## 2.1 நிதி விளைவுகள்

-----------------------------

(அ) மீளாய்வாண்டின் செயற்பாட்டு விளைவானது ரூபா 159,337,064 ஆக பற்றாக்குறையானதொன்றானதுடன், அதற்கு உடனொத்த முன்னைய ஆண்டின் பற்றாக்குறை ரூபா 67,708,979 ஆகும். அதற்கமைய நிதி விளைவுகளில் தொடர்ந்தும் ரூபா 91,628,085 ஆக வீழ்ச்சியினை அவதானிக்கக்கூடியதாக இருந்தது. இந்த வீழ்ச்சிக்கு சம்பளங்கள் மற்றும் உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்ட சேவைகள் செலவினம் மற்றும் பெறுமானத்தேய்வு ஒதுக்கப் பெறுமதி அதிகரித்தமை பற்றாக்குறை அதிகரித்தமை தொடர்பில் பிரதான காணரமாக அமைந்திருந்தது.

(ஆ) மீளாய்வாண்டின் மற்றும் கடந்த நான்கு வருடங்களின் பங்களிப்பு தொடர்பான தகவல்கள் பின்வருமாறு.

| | 2018 | 2017 | 2016 | 2015 | 2014 |
|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| பற்றாக்குறை | (159,337,064) | (67,708,979) | (204,029,628) | (103,698,892) | (101,915,819) |
| கூட்டு | | | | | |
| ஊழியர் ஊதியம் | 926,452,712 | 738,119,700 | 645,615,622 | 580,380,223 | 467,368,504 |
| பெறுமானத்தேய்வு | 417,196,606 | 383,187,600 | 256,798,190 | 152,595,640 | 130,886,772 |
| பெறுமதி சேர்த்தல் | 1,184,312,254 | 1,053,598,321 | 698,384,184 | 629,276,971 | 496,339,457 |

2014 ஆம் ஆண்டு முதல் பற்றாக்குறை குறைவடைந்து / கூடியவாறு மீளாய்வாண்டின் போது பற்றாக்குறை அதிகரித்திருந்த போதிலும், ஊழியர் ஊதியம் மற்றும் பெறுமானத்தேய்வு ஆகியவையும் தொடர்ச்சியாக அதிகரித்திருந்தது. அதற்கமைய பெறுமதி சேர்த்தலும் தொடர்ச்சியாக அதிகரித்திருந்தது.

## 2.2 பிரதான வருமானம் மற்றும் செலவின விடயங்களின் போக்கு தொடர்பான பகுப்பாய்வு

| | மீளாய்வாண்டு | முன்னைய ஆண்டு | விலகல் | விலகலின் சதவீதம் |
|---|---|---|---|---|

| வருமானம் | ரூபா .000 | ரூபா .000 | ரூபா .000 | |
|---|---|---|---|---|
| அரசாங்க மானியம் | 1,546,243 | 1,415,167 | 131,076 | 9 |
| பல்கலைக்கழகத்தின் வருமானம் | 28,899 | 29,280 | (381) | (1) |
| | ------------- | -------------- | --------------- | |
| | 1,575,142 | 1,444,447 | 130,695 | 9 |
| | ======= | ======== | ======== | |
| செலவினம் | | | | |
| ஆனணி வேதனம் | 930,846 | 748,531 | 182,315 | 24 |
| பெறுமானத்தேய்வு | 417,197 | 383,188 | 34,009 | 9 |
| ஏனைய செலவினம் | 386,436 | 380,437 | 5,999 | 2 |
| | ------------ | -------------- | ------------- | |
| மொத்த செலவினம் | 1,734,479 | 1,512,156 | 222,323 | 15 |
| | ======= | ======== | ======= | |
| பற்றாக்குறை | (159,337) | (67,709) | 91,628 | (135) |

இது தொடர்பில் பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மீளாய்வாண்டின் போது பல்கலைக்கழகத்தின் ஒட்டுமொத்த வருமானம் 9 சதவீதத்தினால் அதிகரிப்பொன்றினை காண்பித்ததுடன், அந்த அதிகரிப்பினுள் அரச மானியத்தின் அடிப்படையிலான காலக்கழிவு 2 சதவீதம் உள்ளடங்கியிருந்ததுடன், பல்கலைக்கழக்த்தின் வருமான ஈட்டத்தில் 1 சதவீதமான வீழ்ச்சியொன்று ஏற்பட்டிருந்தது.

(ஆ) மீளாய்வாண்டின் மொத்த மீண்டெழும் செலவினம் 15 சதவீதத்தினால் அதிகரித்திருந்ததுடன், அதனுள் அரச கொள்கையின் அடிப்படையில் சம்பளம் அதிகரித்தமையால் ஆளணி வேதனம் 24 சதவீதத்தாலும், நிலையான சொத்துக்களுக்கான பெறுமானத்தேய்வு 9 சதவீதத்தினாலும் அதிகரிப்பதற்கு தாக்கமளித்திருந்தது.

(இ) மீளாய்வாண்டினுள் பற்றாக்குறை 135 சதவீதத்தால் அதிகரித்திருந்தது.

**2.3 பகுப்பாய்வு ரீதியான நிதி மீளாய்வு**

---------------------------------------------------------------

மீளாய்வாண்டின் இறுதியில் உள்ளபடியான பல்கலைக்கழகத்தின் நடைமுறை விகிதம் 2:2.54 ஆக இருந்ததுடன் அதன் ஏற்றுக்கொள்ளப்பட்ட விகிதமானது 2:1 ஆனமையால் பொறுப்பொன்று விகிதத்தினை விஞ்சிய 1.54 ஆன நடைமுறை பொறுப்பொன்று வெளிப்படுத்தப்பட்டது. முன்னைய ஆண்டின் நடைமுறை விகிதமானது 2:1.86 ஆனமையால் தொடர்ந்தும் முன்னைய வருடத்தினை விட நடைமுறை விகிதமானது 0.86 ஆன வீழ்ச்சியொன்று வெளிப்படுத்தப்பட்டது.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

-----------------------------------

### 3.1 இனங்காணப்பட்ட நட்டங்கள்

----------------------------------------------

| | கணக்காய்வு அவதானிப்புகள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரைகள் |
|---|---|---|---|
| (அ) | வயம்ப பல்கலைக்கத்தினால் 2017 ஆம் ஆண்டின் சனவரி மற்றும் செப்தெம்பர் மாதங்களில் ஊழியர் நம்பிக்கைப்பொறுப்பு நிதியச் சபைக்குசெலுத்த வேண்டிய பங்களிப்பு பணத்தை செலுத்த தாமதமடைந்தமையால் இரண்டு சந்தர்ப்பங்களில் ரூபா 60,782 தொகை மிகைக் கட்டணமாக செலுத்தப்பட்டிருந்தது. | ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்திற்கு செலுத்துவதற்குரிய அனுப்பி வைத்தல் கட்டளை மாதிரிப்படிவம் (R1) கிடைக்காமையின் காரணத்தால் அதனுடன் தொடர்புடைய தலைமை அலுவலகத்தில் மற்றும் குருநாகலை கிளையில் விசாரித்து அதன் பின்னர் வலைத்தளமொன்றிலிருந்து தரவிறக்கம் செய்வதற்கு அறிவுரைகள் கிடைத்திருந்ததுடன், அதற்கமைய 2017.03.03 ஆந் திகதி குறித்த காசோலை அஞ்சலுக்கு அனுப்பப்பட்டுள்ளது. அதன் போது ஏற்பட்ட தாமதம் தொடர்பில் 2017.07.28 ஆந் திகதி ஊ.ந.நி சபையினால் மிகை அறவீட்டுக் கட்டளை | தாமதத்திற்கான காரணங்களை இனங்கண்டு, பொறுப்பினை வரையறுத்து நட்டம் தொடர்பில் நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | | வெளியிடப்பட்டுள்ளது. | |
| (ஆ) | வயம்ப சர்வதேச மாநாடு 2018 (Winc) இற்காக கொள்வனவு செய்யப்பட்டிருந்த ரூபா 53,529 தொகையான எழுதுகருவிகளின் பற்றாக்குறையொன்று காணப்பட்டது. | ஐயவினாவிற்கமைய வயம்ப சர்வதேச மாநாடு 2018 (Win C) இற்காக பெற்றுக்கொள்ளப்பட்ட எழுதுகருவிகளின் பற்றாக்குறையொன்று உள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளது அவை மாநாட்டிற்கு வருகை தந்த ஆர்வலர்கள் மற்றும் பிரதம விருந்தினர்களுக்கு வழங்கப்பட்டதுடன், பதிவு செய்து பங்குபற்றியவர்களுக்கான எழுதுகருவிகளை விநியோகிக்கும் போது பின்பற்றப்படும் நடைமுறையை விருந்தினர்களுக்கும் பயன்படுத்தல் பொருத்தமானதல்ல. அதற்கமைய பற்றாக்குறையொன்றாக அவதானிக்கப்பட்ட உருப்படிகள் விருந்தினர்களுக்கு விநியோகிக்கப்பட்டுள்ளது. | பற்றாக்குறை காரணங்கள் இனங்காணப்பட்டு பொறுப்பினை வரையறுத்து பற்றாக்குறை தொடர்பில் மேலதிக நடவடிக்கை எடுக்க வேண்டும். |

## 3.2 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

-----------------------------------------------------------------

| கணக்காய்வு அவதானிப்புகள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரைகள் |
|---|---|---|
| வயம்ப அபிவிருத்தி மற்றும் கலாச்சார அலுவல்கள் அமைச்சின் ரூபா 1,430,500 தொகையான நிதியேற்பாட்டின் அடிப்படையில் 02 செயற்திட்டங்கள் 2017 திசெம்பர் 31 ஆந் திகதி பூர்த்தி செய்வதற்காக அமைச்சு மற்றும் | குளியாப்பிட்டிய வளாகத்திற்காக கையளிக்கப்பட்ட பொருளாதார மையத்தின் சாத்தியவளத்தினை பார்ப்பதற்காக மேற்கொள்ளப்பட்ட சந்தை ஆய்வு எனும் செயற்திட்டத்தின் நிறைவு | உரிய காலப்பகுதியினுள் பணியை நிறைவு செய்து வினைத்திறனை அதிகரிப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | |
|---|---|
| பல்கலைக்கழகம் ஆகியவற்றுக்கிடையே உடன்படிக்கைகள் கைச்சாத்திடப்பட்டிருந்த போதிலும், 2018 ஆம் ஆண்டின் இறுதி வரையிலு் அந்த செயற்திட்டங்கள் நிறைவு செய்யப்பட்டிருக்கவில்லை. | செய்யும் அளவிலான தாமதமொன்று இடம்பெற்றது திட்டத்தை மேற்கொள்வதற்குரிய காலம் எடுத்தமை மற்றும் ஆராய்ச்சியின் விளைவொன்றாக இந்த பொருளாதார நிலையத்திற்கு சமனான மேலும் 07 துறைகளை ஆராய்வதற்கு திட்டமிடுவதன் மூலம் விடயப்பரப்பு மேலும் பரவலானமை எனும் விடயத்தினால் ஆகும். |

## 3.3 தொழிற்பாட்டு செயற்திறனின்மைகள்

-----------------------------------------------------------

| <u>**கணக்காய்வு அவதானிப்புகள்**</u> | <u>**முகாமைத்துவத்தின் கருத்துரை**</u> | <u>**பரிந்துரைகள்**</u> |
|---|---|---|
| (அ) ஒவ்வொரு ஆண்டிற்காகவும் ஒவ்வொரு பீடத்திற்கும் இணைத்துகொள்ளப்பட்டிருந்த மாணவர்களின் எண்ணிக்கை தொடர்பான 04 கல்வியாண்டுகளின் தகவல்கள் பின்வருமாறு. | | |

| பீடம் | அங்கீகரிக்கப்பட்ட மாணவர் எண்ணிக்கை | முதலாம் வருடம் | இரண்டாம் வருடம் | மூன்றாம் வருடம் | நான்காம் வருடம் |
|---|---|---|---|---|---|
| விவசாய மற்றும் பெருந்தோட்ட முகாமைத்துவ பீடம் | 150 | 160 | 136 | 138 | 160 |
| | 86 | 86 | 82 | - | - |
| பிரயோக விஞ்ஞான பீடம் | 200 | 169 | 158 | 141 | 79 |
| வியாபாரக் கல்வி மற்றும் நிதிப் பீடம் | 550 | 539 | - | - | - |
| | 500 | - | 484 | 452 | - |
| | 350 | - | - | - | 351 |
| கால்நடை வளங்கள் மற்றும் மோசமான விஞ்ஞான பீடம் | 110 | 103 | 63 | 66 | 67 |
| | 85 | 72 | - | - | - |
| | 60 | - | 25 | 19 | 27 |
| தொழில்நுட்ப பீடம் | 161 | 156 | 136 | - | - |
| மருத்துவ பீடம் | 75 | 72 | - | - | - |

| | | | |
|---|---|---|---|
| 1357 | 1092 | 819 | 684 |
| === | ===== | ==== | ==== |

| | | | |
|---|---|---|---|
| | 2017/2018 மீளாய்வாண்டிற்காக 1,472 மாணவர்களை இணைத்துக்கொள்ள திட்டமிடப்பட்டிருந்ததுடன், இணைத்துக் கொள்ளப்பட்ட மாணவர்களின் எண்ணிக்கை 1357 ஆகும். அதற்கமைய 4 சதவீதமான அளவினை இணைத்துக்கொள்ள தவறியிருந்ததுடன், மருத்துவ பீடத்திற்காக 75 மாணவர்கள் இணைத்துக் கொள்ள முடியுமான போதிலும், 72 மாணவர்களே இணைத்துக் கொள்ளப்பட்டிருந்தனர். பிரயோக விஞ்ஞான பீடத்தற்காக 200 பேர் இணைத்துக்கொள்ளப்படக்கூடியதாக இருந்த போதிலும், 169 பேர் மாத்திரமே இணைத்துக் கொள்ளப்பட்டிருந்தனர். | மருத்துவ பீடத்திற்கு 72 மாணவர்களை மாத்திரம் இணைத்துக் கொள்ள காரணமாக அமைந்த விடயங்கள் மருத்துவ பீடத்திற்கு புறம்பாக மற்றும் மருத்துவ பீடத்தின் கட்டுப்பாட்டிலிருந்து விலகிய காரங்களால் ஏற்பட்டது. எதிர்வரும் வருடத்தில் இந்த நிலை ஏற்படாதிருக்க உரிய நடவடிக்கை எடுக்குமாறு பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் மருத்துவ மற்றும் பல் மருத்துவ நிலையியற் குழுவிற்கு பீடாதிபதியால் அறிவிக்கப்பட்டுள்ளது. | எதிர்பார்த்த நிலைமைகளை பூர்த்தி செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஆ) | பிரயோக விஞ்ஞான பீடத்தின் விஞ்ஞானமானி (பொது) பட்டம் பாடநெறியின் 2017 ஆம் ஆண்டின் போது 120 மாணவர்களில் பரீட்சைகளை நிறைவு செய்யாத 62 மாணவர்கள் காணப்பட்டதுடன், | 2017 மற்றும் 2018 ஆம் ஆண்டுகளின் | நிலவும் நிலைமை உரிய |

| | | | |
|---|---|---|---|
| | 2017 யூலை மற்றும் 2018 சனவரி மாதங்களில் பட்டப்படிப்பை பூர்த்தி செய்திருந்த மாணவர்கள் முறையே 11 மற்றும் 09 ஆகும். | போது பிரயோக விஞ்ஞான பீடத்தின் விஞ்ஞானமானி (பொது) பட்டப் பாடநெறியில் சில மாணவர்களுக்கு முதலாவது சந்தர்ப்பத்திலேயே தமது பட்டப்படிப்பினை நிறைவு செய்ய முடியாது போயிருந்தது. எனினும், அந்த அனைத்து மாணவர்களும் திட்டவட்டமான (கல்வியாண்டு) காலப்பகுதியினுள் தமது பட்டப்படிப்பினை நிறைவு செய்ய வேண்டியமையால், அந்த காலப்பகுதியினுள் அந்த மாணவர்களால் உரிய தகுதிகள் பூர்த்தி செய்யப்பட வேண்டும் என்பது எதிர்பார்க்கப்படுகின்றது. | மட்டத்தில் கொண்டு செல்ல நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (இ) | தொழில்நுட்ப பீடம் ஆரம்பிக்கப்பட்டு 02 வருடங்கள் கடந்திருந்த போதிலும், இந்த பீடத்திற்கான அங்கீகரிக்கப்பட்ட கல்விசார் பதவியணியை இணைத்துக் கொள்ள முடியாது போயிருந்தது. 2017 ஆம் ஆண்டின் போது ஆரம்பிக்கப்பட்டிருந்த தொழில்நுட்ப | பல்கலைக்கழகத் திற்காக இயந்திர உபகரணங்களை கொள்வனவு | கல்விசார் பதவியணியை இணைத்துக்கொள்ள |

| | | | |
|---|---|---|---|
| | விடயத்திற்கு உரித்ததாக பிரயோக பயிற்சிக்காக ரூபா 19,826,756 தொகையான இயந்திர உபகரணங்கள் கொள்வனவு செய்யப்பட்டிருந்த போதிலும், இந்த இயந்திரங்களை பயன்படுத்தி 2018 ஆம் ஆண்டின் முதலாம் வருட மற்றும் இரண்டாம் வருட மாணவர்களுக்காக பிரயோக பயிற்றுவித்தல்கள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | செய்யும் போது எல்லா சந்தர்ப்பத்திலும் மாணவர்களின் கற்பித்தல் தேவைப்பாட்டின் அடிப்படையில் மாத்திரம் கொள்வனவுகள் மேற்கொள்ளப்படுவதுடன், அவை குறைப்பயன்பாடின்றி மாணவர்களின் பிரயோகப் பயிற்சிகளுக்காக வழங்கப்படும். | நடவடிக்கை எடுக்கப்பட்டதுடன், மாணவர்களுக்கு பிரயோக பயிற்சிகளை கூடியளவு விரைவாக வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஈ) | ரூபா 3,835,000 தொகைக்கு மதிப்பீடு செய்யப்பட்ட 711 பேர்ளின் பரப்பளவான 08 வயல் காணிகளை கைப்பற்றுவதற்காக 2013 ஆம் ஆண்டின் போது ரூபா 1,013,750 தொகை பன்னல பிரதேச செயலகத்தில் வைப்புச் செய்யப்பட்டுள்ள போதிலும், உரிய வயல் காணிகளை சுவீகரிப்பதற்கு இதுவரையிலும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | இதனூடாக இந்த 08 காணித் துண்டுகளை சுவீகரித்தல் தொடர்பில் சட்டரீதியாக செயற்படும் இயலுமை மற்றும் அதிகாரங்கள் உள்ளது. பன்னல பிரதேச செயலாளருக்கே ஆகும். இதுவரையிலும் விசாரணையொன்றைத் மேற்கொள்வதற்கு அதிகாரச்சட்டத்தின் 4(4) இன் கீழ் எதிர்ப்பு விசாரணையை மேற்கொள்வதற் | துரிதமாக காணிகைள சுவீகரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | | கு மற்றும் சுவீகரிக்கும் பணியை துரிதப்படுத்துவதற்காக 38(அ) உப கட்டளையின் கீழ் கட்டளையொன்றினை பெற்றுக்கொள்வதற்காக பதிவாளரால் உயர் கல்வி அமைச்சால் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. | |
| (உ) | உலகத்தரப்படுத்தல் மற்றும் இலங்கை பல்கலைக்கழங்களின் தரப்படுத்தலுக்கமைய 2017 ஆம் ஆண்டின் போது 5791 மற்றும் 08 ஆம் இடத்தினை பெற்றிருந்ததுடன், மீளாய்வாண்டின் போது முறையே 8139 மற்றும் 08 ஆம் இடங்களை பெற்றிருந்தது. | பல்கலைக்கழகத்திற்கு உரித்தான இடத்தினை முன்கொண்டு வருவதற்கு பல்வேறு ஆராய்ச்சி மாநாடுகள் (சர்வதேச மற்றும் தேசிய மட்டத்திலான) சில 2018 ஆம் ஆண்டின் போது நடாத்தப்பட்டதுடன், எதிர்காலத்தில் பல்கலைக்கழகத்தின் பேராசிரியர்கள், நிர்வாக பதவியணி, மாணவர்களால் மேற்கொள்ளப்படும் | தரப்படுத்தல்களில் உயர்வான முன்னேற்றமொன்றை பெற்றுக்கொள்ள நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | |
|---|---|---|
| | ஆராய்ச்சிகளின் எண்ணிக்கையை அதிகரிப்பதற்கும், அவற்றை பல்கலைக்கழகத்தின் வலைத்தளத்தில் நாளதுவரையாக்குவதல் மூலம் பல்கலைக்கழகத்திற்கு உரித்தான இடத்தினை முன்கொண்டுவருவதற்கு எதிர்பார்க்கின்றோம். | |

**(ஊ) தீர்க்கப்படாதுள்ள கணக்காய்வு பந்திகள்**

---------------------------------------------------------------------------

| | | |
|---|---|---|
| மேற்படி கற்கைகளுக்காக வெளிநாடு செல்வதற்கு உத்தேசித்துள்ள காலப்பகுதியினுள் மீண்டும் வராத இரு விரிவுரையாளர்களிடமிருந்து 2011 ஆம் ஆண்டு முதல் அறவிடப்பட வேண்டிய ரூபா 3,172,714 தொகையை துரிதமாக அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | திரு. ஆர்.எம்.டபிள்யூ. எஸ் ரத்னாயக்க அவர்களுக்கு சொந்தமான சுமார் 12 இலட்சம் தொகையான நலன்புரி நிதியத்திலிருந்து சுமார் 9 இலட்சம் அளவான பல்கலைக்கழகத்திற்கு அறவிடப்பட வேண்டிய தொகையினை அறவிடுவதற்கு அவரின் சட்டத்தரணியினூடாக நடவடிக்கை எடுக்கப்பட்டவறு | நிறுவனத்திற்கு அறவிடப்பட வேண்டிய பணத்தை துரிதமாக அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

உள்ளது.
எச்.பீ.ஏ
ரூபசிங்ஹ
அவர்கள்
தொடர்பில் சட்ட
நடவடிக்கைகள்
ஆரம்பிக்கப்பட்டு
ள்ளன.

## 3.4 நிதியங்களின் குறைப்பயன்பாடு

---------------------------------------------------

| கணக்காய்வு அவதானிப்புகள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரைகள் |
|---|---|---|
| மீளாய்வாண்டின் மற்றும் கடந்த சில வருடங்களுக்கு உரியதாக பல்கலைக்கழகத்திற்கு வழங்கப்பட்டிருந்த மூலதன நிதியங்களைப் பயன்படுத்தல் தொடர்பான தகவல்கள் பின்வருமாறு. | அவதானிப்புக்களுடன் இணங்குகின்றேன். | நிதிகளை பயனுள்ள விதத்தில் ஈடுபடுத்தவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| விபரம் | 2018 ரூபா | 2017 ரூபா | 2016 ரூபா | 2015 ரூபா |
|---|---|---|---|---|
| ஆரம்ப மீதி | 38,556,947 | 67,905,448 | 1,033,030 | 12,754,413 |
| நிதியங்களின் பெறுவனவு | 1,273,312,641 | 827,844,307 | 911,033,471 | 364,264,693 |
| | ----------------- | --------------- | -------------- | --------------- |
| மொத்தப் பங்களிப்பு | 1,311,869,588 | 895,749,755 | 912,066,501 | 377,019,106 |
| நிதியங்களின் பயன்பாடு | 1,206,918,074 | 807,464,357 | 743,336,061 | 262,865,324 |
| | ----------------- | ---------------- | --------------- | --------------- |
| நிதியங்களிலான சேமிப்பு | 104,951,513 | 88,285,398 | 168,730,440 | 114,153,782 |
| செலுத்த வேண்டிய பொறுப்புக்கள் | (49,072,102) | (49,728,450) | (100,824,992) | 113,120,752 |
| | ---------------- | --------------- | ---------------- | --------------- |
| தேறிய சேமிப்பு | 55,879,411 | 38,556,948 | 67,905,448 | 1,033,030 |
| | ======= | ======= | ======= | ====== |

மீளாய்வாண்டின் போது மற்றும் கடந்த 02 வருடங்களில் திறைசேரியிலிருந்து மற்றும் பல்கலைக்கழகங்கள் மானியங்கள் ஆணைக்குழுவினால் வழங்கப்பட்டிருந்த மூலதன நிதியேற்பாடுகளில் ரூபா 55,879,411 ஆன நிதியம் பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை.

## 3.5 விளைவற்ற அல்லது குறைப்பயன்பாடுடைய ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்கள்

---

| | கணக்காய்வு அவதானிப்புகள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரைகள் |
|---|---|---|---|
| (அ) | வேன் வண்டி 2014 ஆம் ஆண்டு முதல் 2019 பெப்ரவரி மாதம் வரையிலும் ஓட்டத்தில் ஈடுபடுத்தப்படாதிருந்ததுடன் 2018 நவம்பர் 08 ஆந் திகதி ரூபா 175,000 தொகை செலவிடப்பட்டு பழுதுபார்க்கப்பட்டிருந்தது. | இலக்கம் 54-1785 கொண்டு வேன் வண்டியின் தகவல்கள் தொழில்நுட்ப நிலையத்தில் நடைமுறை பல்லூடக பிரிவினை நிர்மாணிப்பதற்கு குறித்த பழுதுபார்த்தல்களின் பின் கையளிப்பதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளது. | சொத்துக்களை பயனுள்ளதாக பயன்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஆ) | மார்க்கந்துர மருத்துவ நிலையத்திற்காக பொருத்தமான கட்டிடமொன்றினை நிர்மாணிக்காது 2015 ஆம் ஆண்டின் போது ரூபா 680,041 தொகைக்கு கொள்வனவு செய்யப்பட்டிருந்த மருத்துவ உபகரணங்கள் விளைவற்றுக் காணப்பட்டது. | 2015 நவம்பர் மாதமளவில் ஒப்பந்தக்காரரால் நிர்மாண நடவடிக்கைகள் நிறுத்தப்பட்டிருந்ததுடன், நிர்மாணங்கள் நிறுத்தப்பட்டுள்ளதாக கடிதங்கள் மூலம் அவ்வவ்போது உபவேந்தருக்கு அறிவிக்கப்பட்ட போதிலும், அந்த நிர்மாணங்கள் முழுமையாக அறவிடுவதற்கு இது வரையிலும் முடியாது போயுள்ளது.<br><br>பொருட்களை கட்டளையிடும் சந்தர்ப்பங்களில் மருத்துவ நிலையத்தின் பணிகள் நிறைவடந்த பகுதியொன்று இருந்ததுடன், பொருட்கள் | பெறுகைகள் மேற்கொள்ளும் போது திட்டமிடலுடன் செயற்பட வேண்டும். |

| | | |
|---|---|---|
| | கோரப்பட்டுள்ளது நிர்ணயிக்கப்பட்டவாறு உள்ள பகுதிக்கு மற்றும் பணி நிறைவடைந்துள்ள பகுதிக்காவதுடன், அதில் கோரப்பட்ட பொருட்களில் சில பொருட்கள் தற்போது பயன்படுத்தப்படுவதாகவும் தொடர்ந்தும் அறவிக்கின்றேன். | |

## 3.6 செயற்திட்ட அல்லது மூலதன பணி தாமதங்கள்

--------------------------------------------------------------------------------

| கணக்காய்வு அவதானிப்புகள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரைகள் |
|---|---|---|
| **(அ) தாமதமடைந்த செயற்திட்டங்கள்**<br>-------------------------------------------------- | | |
| 2014 ஆகஸ்ட் 17 ஆந் திகதியில் உள்ளபடியாக நிறைவு செய்யப்பட வேண்டிய மாக்கந்தூ மருத்துவ நிலையத்தினை நிர்மாணித்தல் இதுவரையில் பூர்த்தி செய்யப்பட்டிராததுடன், ஒப்பந்தக்காரரால் குறித்த ஒப்பந்தம் கைவிடப்பட்டிருந்தது. இதற்காக செலுத்தப்பட்டிருந்த பணி முற்பணங்கள் ரூபா 1,601,420 தொகையான பணமும் அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | தீர்ப்பனவு நிறுவனத்தினால் வழங்கப்பட்டுள்ள சந்தர்ப்பமும் புறக்கணிக்கப்பட்டுள்ளமையால் தேவையான காலம் வழங்கப்பட்டு 2019 மார்ச் மாதம் முதல் இந்த உடன்படிக்கை இரத்துச் செய்யப்பட்டுள்ளது. நிறைவேற்றுவதற்குள்ள சிறு பூர்த்தியாக்கல்களை மேற்கொள்வதற்காக பல்கலைக்கழகத்தின் பராமரிப்பு பிரிவினால் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டவாறு உள்ளது.<br><br>கைச்சாத்திடப்பட்ட உடன்படிக்கைகளின் பிரகாரம், ஒப்பந்தக்காரருக்கு செலுத்த வேண்டிய தொகையில் செலுத்திய முற்பணம் ஈடுசெய்யப்பட்டுள்ளதுடன், | அறவிடப்பட வேண்டிய பணத்தை அறவிடுவதற்கு கட்டிடத்தின் உரிய குறைபாடுகளை நிவர்த்தி செய்து துரிதமாக பயன்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | |
|---|---|---|
| | எஞ்சிய பணத்திற்கான முற்பணத் தொகையை அறவிடுவதற்கு இலங்கை வங்கிக்கு பிணைமுறிகள் வழங்கப்பட்டுள்ளதுடன் இன்னும் அந்தப் பணம் வங்கியினால் பல்கலைக்கழகத்திற்கு வழங்கப்பட்டிருக்கவில்லை. அதற்கான பின்தொடர் நடவ்டிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன. | |

**(ஆ)** **வெளிநாட்டு செயற்திட்டங்கள்**

| | | |
|---|---|---|
| வயம்ப பல்கலைக்கழகத்தின் கல்விசார் சமூக பணிகள் மற்றும் பீடங்களுக்கான கற்றல் உபகரணங்களை வழங்குதல், மேம்படுத்தல், பலப்படுத்தல் மற்றும் அபிவிருத்தி செய்வதற்கான இலங்கை சனநாயக சோசலிசக் குடியரவு உலக வங்கியுடன் இணைந்ததாக மேற்கொள்ளப்பட்ட உயர்கல்வி செயற்திட்டம் மற்றும் அபிவிருத்தி பணிகளை துரிதப்படுத்தும் செயற்திட்டத்தின் பெறுமதி ரூபா 5 மில்லியனான உதவி தொகைக்குரிய முன்மொழிவு மற்றும் செலவினத்திட்டம் கணக்காய்விற்கு எடுக்கப்பட்டிருக்கவில்லை. | செயற்திட்டத்தின் செயல்நடவடிக்கைத் திட்டம் Project Achievement Template (PAT) மூலம் குறிப்பிடப்பட்டுள்ளதுடன், அது உடன்படிக்கையின் ஒரு பகுதியாகும். செயற்திட்ட பணிகள் Project Achievement Template (PAT) இன் பிரகாரம் மேற்கொள்ளப்படும். எவ்வாறெனினும், வயம்ப பல்கலைக்கழகத்தினால் முன்வைக்கப்பட்ட செயற்திட்ட முன்மொழிவில் சான்றுப்படுத்தப்பட்ட பிரதிகள் உரிய பிரிவுகளினால் கோரப்பட்டுள்ளதுடன், அந்த பிரதிகள் கிடைத்தததன் பின்னர் அரச கணக்காய்விற்கு முன்வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ள. | செயற்திட்ட அலுவலகத்தினால் உரிய உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்ட அறிக்கைப் பதிவேடுகள் கணக்காய்விற்கு முன்வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

## 3.7 பெறுகைகள் முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்புகள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரைகள் |
|---|---|---|

| | | | |
|---|---|---|---|
| (அ) | தயாரிக்கப்பட்டிருந்த பெறுகைகள் திட்டத்திற்கமைவான மதிப்பிடப்பட்ட ரூபா 8.5 மில்லியனான 02 செயற்திட்டங்கள் நிறைவு செய்யப்பட்டிருக்கவில்லை. | வாசிகசாலை கேட்பேர் கூடத்திற்கான பொருட்களை கொள்வனவு செய்தல் ரூபா 7.5 மில்லியன் ஆகும்.<br><br>2018 ஆம் ஆண்டின் போது அதற்காக ஒதுக்கப்பட்டிருந்த நிதியேற்பாடுகள் போதுமானதாக இல்லாதிருந்தமையால் எதிர்வரும் வருடமொன்றில் கொள்வனவு செய்ய பரிந்துரை செய்யப்பட்டிருந்தது.<br><br>அதனால் அந்த நிதியேற்பாடுகளில் ரூபா 6 மில்லியன் நிதி கேட்போர் கூடத்திற்கு இணையத்தள வசதிகளை மேம்படுத்துவதற்காக பயன்படுத்தப்பட்டதுடன், எஞ்சிய நிதியேற்பாடுகளில் முன்வைக்கப்பட்டிராமையால் அதற்காக கொள்வனவு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.<br><br>ஆங்கிலப் பிரிவிற்காக இரசாயன ஆய்வுகூட உபகரணங்களை பெற்றுக்கொள்வதற்காக ரூபா 01 மில்லியனான பொருட் கோரிக்கை பத்திரங்கள் கல்விப் பிரிவினால் முன்வைக்கப்பட்டிராமையால் அதற்காக கொள்வனவு செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | பெறுகைகள் திட்டத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஆ) | கடந்த வருடங்களில் ஆரம்பிக்கப்பட்டு பூர்த்தி செய்யப்பட்டிராத 16 செயற்திட்டங்களுக்காக மீளாய்வாண்டின் போது ரூபா | கடந்த வருடங்களில் ஆரம்பிக்கப்பட்டு பூர்த்தி செய்யப்பட்டிராத செயற்திட்டங்களையும் | பெறுகைகள் திட்டத்தினை தயாரிக்கும் போது அனைத்து விடயங்களையும் |

198,216,000 தொகையான நிதியேற்பாடு உள்ளடக்கி 2019 ஆம் கருத்திற் கொண்டு
மேற்கொள்ளப்பட்டிருந்த போதிலும், ஆண்டிற்கான விரிவான தயாரிக்கப்பட வேண்டும்.
மேற்படி சுற்றறிக்கையின் 10 ஆம் பெறுகைகள் திட்டமொன்று
பிரிவிற்கமைய விரிவான பெறுகைகள் தயாரிக்கப்பட்டுள்ளது.
திட்டமொன்று
தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

## 3.8 ஒப்பந்த நிர்வாகத்திலான குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்புகள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரைகள் |
| --- | --- | --- | --- |
| (அ) | 2014 யூன் 26 ஆந் திகதிய HE/PR/2016/26 ஆம் இலக்க அமைச்சரவை பிரமாணக் குறிப்பு மற்றும் பின்னிணைப்பு இலக்கம் 01 இன் மூன்றாம் நிரலின் கீழ் அமைச்சரவை அங்கீகாரம் கிடைத்துள்ளதாகவும் தகவல்கள் குறிப்பிடப்பட்டிருந்த நிர்மாணப் பணிகள் உரிய காலகட்டத்தினுள் மொத்தக் கிரய விலகல்களின்றி மேற்கொள்ளப்பட வேண்டும் என குறிப்பிடப்பட்டிருந்த பிரயோக விஞ்ஞான பீடத்தின் கட்டிடத்தின் ரூபா 11,142,146 தொகையான மேலதிக மதிப்பீடொன்று முன்வைக்கப்பட்டிருந்ததுடன், அதன் விடயம் 10 இன் பிரகாரம் விரிவான உப மதிப்பீடொன்றில் மூலம் நிலவும் மற்றும் புதிய கட்டிடம் தொடர்புடைய முன்வைத்தலொன்று மேற்கொள்வதற்கு ரூபா 5,833,280 பெறுமதியான அந்த மதிப்பீட்டுடன் மற்றும் 05 ஆம் உருப்படி மூலம் முறையே ரூபா 1,485,225 பெறுமதியான வாகனத் தரிப்பிடமொன்றும் மற்றும் ரூபா 1,082,250 பெறுமதியான சுவர் எழுப்புதல் ஆகிய மேலதிகமல்லாத பணிகளும் உள்ளடக்கப்பட்டு பெறுகைகள் நடைமுறைக்கு புறம்பாக | மேலதிகப் பணிகளுக்காக ரூபா 11.1 மில்லியன் மதிப்பீடொன்று முன்வைக்கப்பட்டிருந்த போதிலும், பணிப் பொறியியலாளரால் முன்வைக்கப்பட்டிருந்த போதிலும், பணிப் பொறியியலாளரால் பரிந்துரைகள் வழங்கப்பட்டிருந்தது. அங்கீகரிக்கப்பட்ட கிரயமான ரூபா 367 மில்லியனும் செலுத்துவதற்கு முடியுமானால் மாத்திரம் அந்த பணியை நிறைவு செய்வதற்கு மாத்திரமாகும். மேற்படி நிர்மாணத்திற்காக மொத்தக் கிரய மதிப்பீட்டிலான விலகலின்றி பூர்த்தி செய்யப்பட வேண்டும் எனும், அமைச்சரவை அங்கீகாரம் அத்துமீறப்பட்டிருக்கவில்லை. பிரயோக விஞ்ஞான பீடத்தின் பீடாதிபதி மற்றும் பகுதித் தலைவர்களின் தேவைப்பாட்டிற்கமைய அவர்களால் | மேலதிக கிரயமொன்றில்லாது உரிய காலப்பகுதியினுள் நிர்மாணங்களை நிறைவு செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | போட்டி அடிப்படையிலான கூறுவிலை கோரலும் உடன்படிக்கையும் மற்றும் அங்கீகாரமின்றி அமைச்சரவை அங்கீகாரத்திற்கு முரணாக நிர்மாணப் பணிகள் ஆரம்பிக்கப்பட்டிருந்தன. | மேற்கொள்ளப்பட்ட கோரிக்கைகளை கருத்திற் கொள்ளப்பட்டு இந்த உருப்படி 05 இன் வேலைப்பகுதிகளுக்கு மேலதிகமாக மதிப்பீட்டிற்கு உள்ளடக்கப்பட்டுள்ளது. எனினும் அதனூடாக ஒப்பந்தத்தின் மொத்தக் கிரய விலகல் அல்ல. பீடத்தின் தேவைப்பாடு மற்றும் கோரிக்கையின் பிரகாரம் முன்மொழியப்பட்ட மேலதிக வேலைப் பகுதிகள் ஒப்பந்தக்காரரைக் கொண்டு நிறைவேற்றிக் கொள்ளவும் அதற்காக எவ்விதமான மேலதிக கிரயமொன்றினை மேற்கொள்ளாதிருப்பதற்கும் பல்கலைக்கழகம் நடவடிக்கை எடுத்துள்ளது. பிரதான ஒப்பந்தத்தின் கீழ் இந்த மேலதிக பணிப் பகுதிகளை நிறைவேற்ற முடியுமாக இருந்ததனூடாக மற்றுமொரு ஒப்பந்தக்காரரை தேடிப்பார்த்து கூறுவிலைகளை கோருதல் அவசியமற்றது. | |
| (ஆ) | 2016 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளபடியான 14 கைத்தொழில்களும், 2017 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளபடியாக 15 கைத்தொழில்களுக்கும் முறையே ரூபா 60,887,137 மற்றும் ரூபா 452,953,884 எனுமாறு நடைமுறை பணிகளின் எவ்வித செயன்முன்னேற்றமும் மீளாய்வாண்டின் இறுதிவரையிலும் இடம்பெற்றிருக்கவில்லை. | இந்த கைத்தொழிலின் இறுதி பட்டியல்களை தீர்ப்பனவு செய்யும் சந்தர்ப்பத்தில் அவற்றின் மீதிகள் குறைவடைதல் இடம்பெறும். இவ்வாறு இந்த இரண்டு வருடங்களினுள் கிடைத்த இறுதிப் பட்டியல்கள் / நிறுத்தி வைக்கப்பட்ட பட்டியல்களின் | பட்டியல்கள் துரிதமாக தீர்க்கப்பட்டு பொறுப்பிலிருந்து விடுவிப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

அடிப்படையில் இந்த மீதிகள் குறைவடைவதுடன் 2017 ஆம் ஆண்டு முதல் இவற்றில் கூடுதலான பெறுமதியொன்று காண்பிக்கப்பட்டுள்ளது. மருத்துவ பீடம் மிகவும் உயர்வான பெறுமதியுடன் நிர்மாணித்தல் இடம்பெற்றமையால் ஆகும்.

## 3.9 மனிதவள முகாமைத்துவம்

--------------------------------------------------

| **கணக்காய்வு அவதானிப்புகள்** | **முகாமைத்துவத்தின் கருத்துரை** | **பரிந்துரைகள்** |
|---|---|---|

(அ) அங்கீகரிக்கப்பட்ட பதவியணி மற்றும் உள்ளபடியான பதவியணி தொடர்பான விபரங்கள் பின்வருமாறு.

| பதவியணி விபரம் | அங்கீகரிக்கப்பட்ட எண்ணிக்கை | உள்ளபடியான எண்ணிக்கை | வெற்றிடங்களின் எண்ணிக்கை | மிகைகளின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| கல்விசார் | | | | |
| -------------- | | | | |
| நிரந்தர (பீடம், அலகுகள் மற்றும் வாசிகசாலை | 238 | 183 | 55 | - |
| உதவி | 25 | 12 | 13 | 01 |
| ஒப்பந்த | 124 | 120 | 04 | - |
| | ------- | ------- | ------- | ------- |
| | 387 | 315 | 72 | 01 |
| | ------- | -------- | ------ | ------- |
| கல்விசாரா | | | | |
| ---------------- | | | | |
| நிறைவேற்று | 40 | 36 | 04 | - |
| இரட்டை அடிப்படை | **229** | 183 | 40 | - |
| ஆரம்ப | 242 | 206 | 36 | - |
| | ------- | ------- | ------- | ------- |
| | 511 | 425 | 86 | - |

| | | | | |
|---|---|---|---|---|
| கூட்டுமொத்தம் | -------<br>898<br>==== | --------<br>740<br>==== | ---------<br>158<br>==== | --------<br>01<br>==== |

| | | |
|---|---|---|
| கணக்காய்விற்கு முன்வைக்கப்பட்ட தற்போதைய செயலாற்றல் அறிக்கையின் பிரகாரம் ஒட்டுமொத்த பதவியணியிலான வெற்றிடம் 18 சதவீதமாக இருந்ததுடன், நிரந்தர கல்விசார் மற்றும் உதவிப் பதவியணியின் வெற்றிடங்கள் 26 சதவீதமாக இருந்ததுடன், வயம்ப பல்கலைக்கழகத்தினால் ஆரம்பிக்கப்பட்ட மருத்துவ பீடத்திற்காக கல்விசார் பதவியணியின் 14 பேர் அங்கீகரிக்கப்பட்டிருந்ததுடன், மீளாய்வாண்டினுள் கல்விசார் பணிகளுக்காக இருவர் இணைத்துக்கொள்ளப்பட்டிருந்ததுடன், பரிந்துரைக்கப்பட்ட 05 விரிவுரையாளர்கள் இணைத்துக்கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | பல்கலைக் கழகங்கள் மானியங்கள் ஆணைக்குழு சுற்றறிக்கை இலக்கம் 876 இன் கீழுள்ள பதவி வெற்றிடங்களை நிரப்புவதற்காக உயர் கல்வி அமைச்சின் பெயர்ப் பட்டியலை தயாரித்து அனுப்பும் போது ஏற்படும் தாமதமும் வெற்றிடத்தை நிரப்பும் நடைமுறை தொடர்பில் தாக்கமொன்றினை ஏற்படுத்தும் 2018.12.21 ஆந் திகதி இடம்பெற்ற கல்விசாரா, நிர்வாகமல்லாத பதவி வெற்றிடங்களின் | பதவியணி வெற்றிடங்களுக்காக இணைத்துக்கொள்ள துரிதமாக நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | | | எண்ணிக்கை 82 ஆக இருந்ததுடன், அந்த பதவிகளை 2019 ஆம் ஆண்டினுள் நிரப்புவதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது. |

## 4 கணக்களிதகைமையும் நல்லாளுகையும்

---

### 4.1 வருடாந்த செயலாற்றல் திட்டம்

---

| | <u>கணக்காய்வு அவதானிப்புகள்</u> | <u>முகாமைத்துவத்தின் கருத்துரை</u> | <u>பரிந்துரைகள்</u> |
|---|---|---|---|
| (அ) | 2014 பெப்ரவரி 17 ஆந் திகதிய நிதி மற்றும் திட்டமிடல் அமைச்சின் PED/RED/01/04/2014/01 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கையின் 01/2014 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கையின் 01/2014 இன் பிரகாரம் பல்கலைக்கழகத்தினால் கூட்டிணைந்த திட்டத்துடன் தயாரிக்கப்பட்டிருந்த செயல்நடவடிக்கைத் திட்டத்தினுள் அந்த சுற்றறிக்கையின் பிரகாரம் அங்கீகரிக்கப்பட்ட பதவியணி விபரங்கள் உரிய வருடத்தின் பாதீடு மற்றும் கட்டுநிதி தேவைப்பாட்டுத் திட்டத்தில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை. | செயல்நடவடிக்கைத் திட்டத்தின் ஒவ்வொரு உருப்படிக்கான பாதிடப்பட்ட தொகையும் உள்ளடக்கப்பட்டுள்ளதுடன் 2019 - 2023 வரையான காலத்திற்காக தயாரிக்கப்படும் கூட்டிணைந்த திட்டத்தின் அங்கீகரிக்கப்பட்ட பதவியணி தொடர்பான தகவல்கள் உள்ளடக்கப்பட்டுள்ளன. | சுற்றறிக்கை அறிவுறுத்தல்களுக்கமைய நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஆ) | பல்கலைக்கழகத்தினால் மீளாய்வாண்டிற்காக தயாரிக்கப்பட்டிருந்த செயல்நடவடிக்கைத் திட்டத்தில் | 2018 ஆம் ஆண்டின் போது செயற்படுத்துவதற்கு திட்டமிடப்பட்ட எனினும், | நோக்கங்களை அடைவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | |
|---|---|---|
| பிரகாரம் 164 நோக்கங்கள் இனங்காணப்பட்டு நடைமுறைப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தடன் 30 நோக்கங்கள் நிறைவேற்றப்பட்டிருக்கவில்லை. | 2018 ஆம் ஆண்டின் போது நிறைவு செய்ய முடியாத பணிகள் 2019 ஆம் ஆண்டிற்குரிய செயல்நடவடிக்கைத் திட்டத்தில் உள்ளடக்குவதற்கு நடவடிக்கை எடுப்பதுடன், 2019 ஆம் ஆண்டில் நிறைவு செய்ய எதிர்பார்க்கின்றோம். | |

## 4.2 உள்ளக கணக்காய்வு

---------------------------------------

| கணக்காய்வு அவதானிப்புகள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரைகள் |
|---|---|---|
| சம்பளங்களை கணிப்பிடல், மாணவர்களை இணைத்துக் கொள்ளல், மாணவர் கற்பித்தல் பணிகள் மற்றும் அதற்காக விரிவுரையாளர்கள், வெளிவாரி விரிவுரையாளரகளை ஈடுபடுத்தல் மற்றும் அவற்றுக்காக கொடுப்பனவு மேற்கொள்ளல், சொத்துக்களின் பாதுகாப்பிற்காக ஈடுபடுத்தப்பட்டுள்ள உள்ளக வேலைத்திட்டங்களை பரிசோதித்தல் போன்ற உள்ளக வேலைத்திட்டங்களை பரிசோதித்தல் போன்ற மேற்படி நிகழ்ச்சித்திட்டத்தில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை. | துறைகளின் பின்பற்றப்படும் உள்ளக வேலைத்திட்டங்களை பரிசோதனை செய்யப்படும்.<br><br>2020 ஆம் ஆண்டின் உள்ளக கணக்காய்வு நிகழச்சித்திட்டத்தினை தயாரிக்கும் போது கணக்காய்வு ஐயவினாவில் குறிப்பிடப்பட்டுள்ள துறைகளும் உள்ளடங்கும் வகையில் நிகழ்ச்சித்திட்டத்தை திட்டமிடுவதற்கு எதிர்பார்க்கின்றோம். | உள்ளக கணக்காய்வு நிகழ்ச்சித்திட்டங்களை திருத்த விடயங்கள் உள்ளடக்கப்பட வேண்டும். |

## 4.3 பாதீட்டுக் கட்டுப்பாடு

----------------------------------------------------

| கணக்காய்வு அவதானிப்புகள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரைகள் |
| --- | --- | --- |
| 07 செயற்திட்டங்களுக்காக திறைசேரியிலிருந்து கிடைத்த ரூபா 296,700,000 நிதியேற்பாடுகளில் 20 சதவீதம் முதல் 100 சதவீதம் வரையான வீச்சிலுள்ள நிதியேற்பாடுகள் எஞ்சியிருந்தன. | 2018 ஆம் ஆண்டின் போது பல்கலைக்கத்திற்கு மூலதன நிதியேற்பாடுகளை ரூபா 400 மில்லியனான தொகை தேசிய வரவு செலவுத் திட்ட திணைக்களத்திடமிருந்து 2018 ஆம் ஆண்டின் போது முதற்பகுதியில் ஒதுக்கப்பட்டிருந்தது. 2018 ஆம் ஆண்டின் மே மாதம் திறைசேரியினால் வெளியிடப்பட்ட நிதியேற்பாடுகளை விடுவிக்கும் பத்திரத்திற்கமைய ரூபா 100 மில்லியனான பணம் நிலுவைப் பட்டியல்களை தீர்ப்பதற்கான மூலதன நிதியேற்பாடுகளின் கீழ் வழங்கப்பட்டிருந்தது. அவ்வாறு ஒதுக்கப்பட்ட ரூபா 100 மில்லியனான பணம் நடைமுறையிலுள்ள செயற்திட்டங்களுக்கிடையே மாற்றுமாறு 2018.09.14 ஆந் திகதி தேசிய பாதீட்டுத் திணைக்களத்தினால் கோரப்பட்டிருந்தது. எனினும், அவ்வாறு மாற்றுவதற்கு நடவடிகடரக எடுக்கப்பட்டிருக்கவில்லை. | விரிவான மதிப்பீடுகளினுள் தேவைப்பாடுகளை இனங்கண்டு நிதியேற்பாடுகளை பெற்றுக்கொள்ள திட்டமிடப்பட்ட வேண்டியதுடன், உரிய செயற்திட்டங்களை துரிதமாக நிறைவேற்ற நடவடிக்கை எடுக்க வேண்டும். |

## 4.4 நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்கள்

----------------------------------------------------------------

| கணக்காய்வு அவதானிப்புகள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரைகள் |
| --- | --- | --- |
| நிலைபேறான அபிவிருத்தி தொடர்பான தேசிய வரவு செலவுத் திட்டத் திணைக்களத்தினால் வெளியிடப்பட்ட சுற்றறிக்கை தொடர்பில் நிறுவனம் அறிந்திருந்த போதிலும், ஐக்கிய நாடுகளின் - 2030 நிகழ்ச்சி நிரலின் பிரகாரம் நிறுவனத்தின் பணிகள் தொடர்பில் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | பதில்கள் வழங்கப்பட்டிருக்கவில்லை. | இது தொடர்பில் கவனம் செலுத்தி நிலைபேறான அபிவிருத்திக்கு பங்களிப்பு செய்ய வேண்டும். |